# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 57
ஜுன் 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

**மீகா**

2751 நியாயாதிபதியே! கைக்கூலி கேட்காதே (7:3)
2752 செம்மையாய் நட; கர்த்தரின் வார்த்தைகள் உனக்கு நன்மை செய்யும் (2:7)
2753 நியாயம் செய் (6:8)
2754 இரக்கத்தைச் சிநேகி (6:8)
2755 உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நட (6:8)
2756 கர்த்தருடைய நாமத்தை மதி (6:9)
2757 பக்தியுள்ளவனாயிரு (7:2)
2758 செம்மையானவனாயிரு (7:2)
2759 உன் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திரு அவர் உன்னைக் கேட்டருளுவார் (7:7)

**நாகூம்**

2760 கர்த்தருக்கு விரோதமாக பொல்லாத நினைவு கொள்ளாதே (19,11)
2761 வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திராதே (3:1)
2762 சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வரும்போது, அரணைக் காத்துக்கொள் வழியைக் காவல்பண்ணு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள் உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து (2:1)

**ஆபகூக்**

2763 கொள்ளையிடாதே (2:8)
2764 கொடுமை செய்யாதே (2:8)
2765 உன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடாதே (2:9)
2766 உன் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதே (2:10)
2767 உன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்து, அவர்களை வெறிக்கப் பண்ணாதே அவனுக்கு ஐயோ! (2:15)
2768 மரத்தைப் பார்த்து விழியென்றும், ஊமையான கல்லைப் பார்த்து எழும்பு என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! (2:19)
2769 அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நீ கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிரு, உன் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூரு (3:17,18)

**செப்பனியா**

2770 'நான்தான், என்னைத் தவிர வேறொருவரும் இல்லை' என்று உன் இருதயத்தில் சொல்லி, நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூராதே' (2:15)
2771 இடுக்கண் செய்யாதே (3:1)
2772 அநியாயஞ் செய்யாதே (3:13)
2773 பொய் பேசாதே (3:13)
2774 வஞ்சக நாவு வேண்டாம் (3:13)



2775 கர்த்தரின் வசனத்துக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டி, அவர்களை நிந்தியாதே (2:10)
2776 தீர்க்கதரிசியே! வீண்பெருமையும் வஞ்சகமுள்ளவனாயிராதே (3:4)
2777 ஆசாரியனே! பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ் செய்யாதே (3:4)
2778 நீதியைத் தேடு (2:3)
2779 மனத்தாழ்மையைத் தேடு (2:3)
2780 கெம்பீரித்துப் பாடு (3:14)
2781 கர்த்தரை விட்டுப் பின்வாங்காதே (1:6)
2782 கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலும், இராதே (1:6)
2783 கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை, தீமை செய்வதும் இல்லையென்று உன் இருதயத்தில் சொல்லாதே (1:12)
2784 கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதே (1:17)
2785 கர்த்தருடைய கோபத்தின் நாள் உன்மேல் வருமுன் நீ உன்னை உய்த்து ஆராய்ந்து சோதி (2:1,2)
2786 கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணாதே (3:11)
2787 கர்த்தருடைய நியாயத்தை நடப்பி (2:3)
2788 கர்த்தரைத் தேடு (2:3)
2789 கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடு (3:2)
2790 கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள் (3:2,7)
2791 கர்த்தரை நம்பு (3:2)
2792 தேவனிடத்தில் சேர் (3:2)
2793 கர்த்தருக்குப் பயப்படு (3:7)

**ஆகாய்**

2794 உன் வழிகளைச் சிந்தித்துப்பார் (1:5,7)
2795 நீ திடன்கொள், வேலையை நடத்து, நான் உன்னுடனே இருக்கிறேன் (2:4)
2796 ஆவியானவர் உன் நடுவில் நிலை கொண்டிருப்பார், நீ பயப்படாதே(2:5)

**சகரியா**

2797 எனக்குச் செவிகொடாமலும், என்னைக் கவனியாமலும் போகாதே (1:4)
2798 விதவையையும், திக்கற்ற பிள்ளையையும் பரதேசியையும் சிறுமையானவனையும் ஒடுக்காதே (7:10)
2799 உன் சகோதரனுக்கு விரோதமாய் உன் இருதயத்தில் தீங்கு நினையாதே (7:10)
2800 வேதத்தையும் கர்த்தருடைய வார்த்தைகளையும் கேளாதபடிக்கு உன் இருதயத்தை வைரமாக்காதே (7:12)

**சகோ. பொற்செல்வன் ஆசீர் செய்திகள் அடங்கிய DVDகள்**

1. உன்னத சீயோன்
2. வேதத்தின் மகத்துவம்
3. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை
4. ஆசீர்வதிப்பதே தேவனின் பிரியம்

*ஒவ்வொன்றின் விலை ரூ. 30/-*

# தேவனுடைய சிநேகிதன்

பா. பொற்செல்வன் ஆசீர்

இயேசுவை ஏற்றுக்கொண்டோரை, மீட்கப்பட்டோரை வேதம் தேவனுடைய பிள்ளைகள் (யோவ1:12) என்று அழைக்கிறது. தேவனுடைய ஆவியால் நடத்தப்படுவோரையோ வேதம் தேவனுடைய புத்திரர் (ரோம8:14) என்று அழைக்கிறது.

ஆபிரகாமை குறித்து வேதம் "தேவனுடைய சிநேகிதன்" என்று யாக்2:23, 2நாளா 20:7 ஏசா41:8 ஆகிய மூன்று இடங்களிலும் குறிப்பிடுகிறது. தேவனை ஆபிரகாம் நேசித்தான்; சிநேகித்தான். தேவனும் அவனை நேசித்தார்; சிநேகித்தார். எத்தனை அருமையான அனுபவம் பாருங்கள்.

இப்படி தேவன் அவனை தன் சிநேகிதன் என்று குறிப்பிட முக்கிய காரணம் ஆபிரகாமுக்கு தேவனோடு இருந்த முக்கியமான அனுபவம் ஜெபஅனுபவம் தான். ஜெபமே ஒரு மனிதனை தேவனுடைய அன்பை ருசிக்கச் செய்கிறது. சரியான ஜெப அனுபவத்திற்கு தேவன்பேரில் செலுத்தும் அன்பு முக்கியம்.

எனவேதான் ஜெபப்பயிற்சியை நமக்குத் தரும் நமது ஜெபப்பயிற்சியாளரான ஆவியானவர் தேவனுடைய அன்பை (ரோமர்5:5) நமது இருதயங்களில் ஊற்றுகிறார். எனவேதான் அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும் என்று 1கொரி3:7 சொல்கிறது.

விசுவாசிக்க வேண்டிய சகலத்தையும் விசுவாசிக்க இயலாமல் தயங்குவதன் காரணம் தேவஅன்பு நம்மை நிரப்பாததால் தான். தேவ அன்பு நம்மை நிரப்ப வேண்டிய அளவு நிரப்பியிருந்தால், தேவன் பேரிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பேரிலும் சந்தேகம், அவிசுவாசம் வராது.

ஆபிரகாம் தேவ அன்பினால் நிரப்பப்பட்டதினால்தான் அவனால் நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் நம்பிக்கையோடே விசுவாசித்தான் (ரோ4:18) இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன் என்று ரோம4:17 துணிந்து செயல்பட்டான்.

எனவே ஆபிரகாமின் ஜெப அனுபவத்தை தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை.

**ஆபிரகாமும் பலிபீடமும்**

ஆபிரகாம் தனக்கு தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தை கட்டினான். ஆதி(12.7).

இன்னும் வாசித்துப் பாருங்கள். ஆதி12.8,13.18,15.9,22.9 போன்ற வசனங்கள் ஆபிரகாம் பலிபீடத்தின் முன் வருகிற அனுபவத்தை காட்டுகிறது. ஆபிரகாம் கூடாரம் போடுகிற இடத்திலெல்லாம், தேவனுக்கென்று ஒரு பலிபீடத்தை உண்டாக்கி அந்த பலிபீடம் கூடாரத்தின் வாசல் முன் பக்கம் இருக்கும்படியாக அந்த பலிபீடத்தை அமைத்திருந்தான் என்று வேதம் கூறுகிறது. தினமும் பலிபீடத்தின் முன் வரும் அனுபவம் ஆபிரகாமுக்கு இருந்தது. பலிபீடம் என்பது



தேவனை சந்திக்கும் இடம். அங்கே தேவனை தொழுது கொள்ளலாம் (ஆதி12:8) இது துதியின் அனுபவம். பலிபீடம் என்பது தேவன் நம்மோடு உடன்படிக்கை பண்ணும் இடம் (ஆதி15:9-18) அங்கே தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் ஆபிரகாம் சும்மா இருக்கவில்லை. அங்கே ஒரு யுத்தத்தை செய்கிறான். இழந்து போன தன் சகோதரனுக்காக தன்னை விட்டு பிரிந்து போன தன் சகோதரனுக்காக யுத்தம் செய்கிறான்.ஆதி14:14-16 இதைத்தான் வேதம் சொல்கிறது, எப்பாப்பிராவும் தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் என்று (கொலோ4:12) பிறருக்காக ஜெபிக்க ஜெபம் என்பது, சொந்த ஜனத்திற்காக ஜெபிக்கின்ற ஜெபம் என்பது சத்துருவோடு போர்க்களத்தில் நின்று போராடும் ஒரு போராட்டமே.

சத்துரு கொள்ளையாடின நம் சகோதரனுக்காக, நாம் ஆபிரகாமைப்போல் சத்துருவின் சேனையை பின் தொடர்ந்து சத்துருவை முறியடித்துசத்துருவை சங்கரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடைய யுத்தம் போன்ற ஜெபஅனுபத்தில் நம்முடைய சத்துரு மாம்சமும் இரத்தமுமான மனுஷனல்ல பொல்லாத பிசாசனவனே (எபே6:17) தன் சகோதரனான லோத்துவை விடுவித்தான். பிறருக்காக ஜெபிக்க அநேகர் இன்று பயப்படுகின்றனர். காரணம், என்னை பிசாசு தாக்கி விடுவானே என்ற அச்சம்தான். பிறருக்காக ஜெபித்தால் என் குடும்பத்தில் போராட்டம் வருமே என்ற பயம்தான். ஆனால் (ஆதி 14:18,19) வசனங்கள் சொல்கிறது. அங்கே யுத்தம் இந்த ஆபிரகாம் தன் சகோதரனுக்காக போராடின ஆபிரகாம் மெல்கிசேதேக்கினால் ஆசீர்வதிக்கப்படுகிறான். மெல்கிசேதேக்கு கிறிஸ்துவுக்கு முன் ஆசீர்வாதம் பூரணமாய் நம்மில் தங்க ஆபிரகாமைப் போல் நாமும் சொந்த இனங்களுக்காய் ஜெபங்களில் போராட வேண்டியது அவசியம்.

**ஆபிரகாமும் பிறர் தேவையும்**

ஆதி 15:2ல் கர்த்தரால் ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமற்' இருக்கிறேனே என்று தேவன் முன் தன் தேவைக்காய் வேண்டி நிற்கிறான் ஆபிரகாம். 25 ஆண்டுகள் இந்த ஒரு தேவை சந்திக்கப்பட காத்திருந்தான் ஆபிரகாம். ஆனால்,

ஆதி 20:17ல் கர்த்தர் அபிமெலேக்கு உடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்தார். அது சாராளின் நிமித்தம் அப்படி நடந்தது என்று வேதம் சொல்கிறது. தனக்கு மனைவி இருக்க தன் தேசத்தில் குடியிருக்க வந்த வேறு ஒருவள் மேல் தன் கண்களை ஆவலாய் பறக்க விட்ட உத்தம இருதயமுடைய அபிமெலேக்குக்கு தேவ தண்டனைதான் தேவன் அவன் வீட்டாரின் கர்ப்பங்களை அடைத்தது.

அபிமெலேக்கின் உத்தமம் பிறர் மனைவியை தொடக்கூடாது என்பது மட்டும் தான். ஆனால் தேவனின் எதிர்பார்ப்போ ஒருவனுக்கு மனைவியிருக்க அந்த ஒருவன் வேறு ஒருவளை அவள் கன்னிகையானாலும் தேடக்கூடாது என்பதுதான். இதை உணர்த்த தான் அபிமெலேக்குக்கு அந்த தண்டனை. அபிமெலேக்கு பெற்ற தண்டனையை ஆபிரகாம் கேள்வி பட்டபோது தான் 25 ஆண்டுகளாய் காத்திருந்து இன்னமும் தான் ஒரு பிள்ளையை தேவனிடமிருந்து பெற்று கொள்ளாதிருந்த போதிலும், "ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான் என்று வேதம் சொல்கிறது. அப்பொழுது தேவன்

அபிமெலேக்கையும் அவன் மனைவியையும் அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்" (ஆதி20:18).

நம்மில் அநேகர் நாம் பூரணப்பட்டிருந்தால் மாத்திரம், நம் தேவைகள் சந்திக்கப்பட்டிருந்தால் மாத்திரம், பிறர் தேவைக்காய் ஜெபிக்க பாரம் கொள்வோம். ஆனால் ஆபிராகாமைப் பாருங்கள் தன்தேவை சந்திக்கப்படாத நிலைமையிலும் பிறர் தேவை சந்திக்கப்பட ஜெபித்து நிற்கிறான். இந்த ஆபிரகாமின் தேவை தேவன் சந்தித்து ஆசீர்வதித்தார். ஈசாக்கை அருளிச்செய்தார்.

இப்பொழுது சொல்லுங்கள் ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்படுவது சரிதானே! நீங்களும் இதே அனுபவத்தை சுதந்தரித்து தேவனுடைய சிநேகிதராய் மாறுங்களேன்.

## திருவசனத் தேர்வு

நமது ஊழியத்தின் மூலம் வாரம் 4 என்ற புத்தகம் 52X4 வசனங்கள் என்ற அடிப்படையில் மனனம் செய்ய வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில் மொத்தம் 208 வசனங்கள் இருப்பிடம் எளிதில் நினைவில் வைக்க வசதியாக உள்ள விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அடிப்படையில் ஒரு திருவசனத்தேர்வு நடைபெறும், தேர்வு **செப்டம்பர்** மாதத்தில் நடைபெறும். தேதி ஜீலை மாத இதழில் வெளியிடுவோம். தேர்வுகள் ஞாயிற்று கிழமை மதியம் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தப்படும்.

தேர்வு : **9 - 15 வயதினர்** **16 - 30 வயதினர்,**
**31 - 45 வயதினர்** **45க்கு மேலான வயதினர்**

என 4 பிரிவினர்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பேருக்கு பரிசுகள் உண்டு, தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஐக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்கு குறையாமல் எழுத வேண்டும்.

அல்லது நாங்கள் குறிப்பிடும் மையத்திற்கு வந்து எழுத வேண்டும். 25 பேருக்கு குறையாமல் எழுதும் தேர்வு மையங்களுக்கு தேர்வு மையம் வாரியாக முதல் பரிசுகள் 4 உண்டு. (1 பிரிவினருக்கு ஒரு பரிசு வீதம்)

தேர்வுக்கு அனுமதி கட்டணம் : ரூ.20 /- மட்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**கிருபையின் ஊழியங்கள், ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.**
**Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.**

**வாரம் 4 என்ற புத்தகம் தேவையானவர்கள் தபாலில் பெற ரூ. 25 அனுப்பியோ, நேரில் பெற ரூ. 20 செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு**
94432 89026, 94421 20257, 94431 95395, 94861 71004, 94429 94126, 94862 33442, 9442913156, 94428 13511, 94881 03026



# சுயத்தை சாராதே! தேவனைச் சாந்து வெற்றிபெறு!

சகோ.S. ஜெபராஜ் President, Grace Ministries

உலகில் வாழ்கின்ற மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தேவைகள் சந்திக்கப்பட வாழ்க்கை போராட்டங்களில் வெற்றிபெற, சாதனைகள் புரிந்து வெளி உலகில் தங்களைக் காண்பிக்க மற்றவர்களைச் சார்ந்தே வாழ்கின்றனர். தன்னை மற்றும் மற்றவர்கள் மீது சார்ந்து வாழும்போது சில வேளைகளில் தோல்விகளையும் சந்திக்க நேரிடுகிறது. மனிதனுடைய வெற்றி தோல்விகள் அவனுடைய பெலத்தையும் அவன் சாந்திருக்கிற பெலத்தையும் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் வேதம் காட்டுகிற மனிதர்களின் வெற்றியின் அடிப்படை தேவ பெலனையே சார்ந்திருக்கிறது என்பது நாம் கற்றுக்கொள்ளுகிற கற்றுக்கொள்ளவேண்டிய உண்மையான செய்தி என்பதை மறந்து விடவேண்டாம்.

### சுயபெலனை சார்ந்து வாழும் வாழ்க்கை

சிலருடைய வாழ்க்கையின் தேவைகள் சந்திக்கப்பட அவர்கள் யாரையும் சார்ந்து வாழவேண்டிய அவசியம் இல்லை. என எண்ணுகின்றனர். பிறருடைய உதவி அவர்களுக்கு தேவை இல்லை. என்னால் எதையும் சாதிக்க முடியும் என்கிற தன் நம்பிக்கை என்ற பெயரில் சுயபெலனை முழுமையாய் நம்பி வாழுகிறவர்களும் இருக்கிறார்கள். மனிதனால் சாதிக்க முடியாத காரியங்கள் ஏராளம் உண்டு. ஆனால் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை. (லூக் 1:3) மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் இயேசுவினிடத்தில் வந்து நித்திய ஜீவனை அடைவதற்கு எந்த நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டான். (மத்19:16) இயேசு, "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு" என்றார். (மத் 19:21) இந்த வார்த்தைகளைக் கேட்ட போது ஆஸ்தியுள்ள அந்த வாலிபன் துக்கமடைந்தவனாய் போய்விட்டான். ஏனெனில் அவனுடைய முழு சார்பும் நம்பிக்கையும் ஆஸ்தியின்மேல் இருந்தது, விலையேறப்பெற்ற நித்திய ஜீவனை விட, உலகத்தின் ஆஸ்தி அவனுக்கு மேன்மையாய் காணப்பட்டது. ஆனால் அவன் இழந்துபோனது விலையேறப் பெற்ற நித்திய ஜீவன். இயேசுவானவர் மேன்மையான உபதேசங்களைச் செய்தாலும், அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தாலும், நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை (யோ5:30) எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்று கூறுவது எவ்வளவு சிறப்பான காரியம். சுயமாய் பேசுகிறவன் சுயமகிமையைத் தேடுகிறான். (யோ7:18) இயேசுவானவர் எத்தனை சிறப்பான முன்மாதிரி. உங்கள் வாழ்க்கையில் உங்கள் சுயபெலனையோ, உங்கள் செல்வத்தையோ, சார்ந்து வாழ்வீர்களானால் மேன்மையான நித்திய ஜீவனை இழந்து விடுவீர்கள்.

### மனிதரை சார்ந்து வாழும் வாழ்க்கை

இன்றைக்கு அநேகர் பிற மனிதர்களின் பெலத்தையும், பணத்தையும் சாந்து வாழ்கிறார்கள். நண்பர்கள், உறவினர் அறிமுகமானவர்கள் பதவியில், அதிகாரத்தில், ஆட்சியில் அமர்ந்திருந்தால் அவர்களுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி பலவிதமான குறுக்கு வழிகளில் செயல்பட்டு

தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதுடன் மற்றவர்களுக்கு கஷ்டங்களையும், இடையூறுகளையும், பிரச்சனைகளையும் உருவாக்குகிற வர்களாய், பிறருடைய நன்மைகளையும், சமாதானத்தையும் அபகரிக்கிறவர்களாய் மாறி விடுகிறார்கள். மனிதர்கள் தரும் தவறான ஆலோசனைகளின்படி நடக்கிறார்கள், பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ணினார்கள். அதன் பலன் என்ன? கர்த்தரின் சபையிலே வாதை நேரிட்டது (எண்31:16) ரெகொபெயாம் வாலிபரோடே ஆலோசனை பண்ணி, தன்னிடத்தில் அவன் ராஜ ஸ்தானத்தை இழந்து (1இரா 12:8,18) பிற மனிதர்களையோ நண்பர்களையோ சார்ந்து வாழ்கின்றவர்களின் முடிவு இதுதான். எனவே தான் சாலமோன் ராஜா தனக்கு ஞானமுள்ள இருதயத்தை தேவனிடத்தில் கேட்கிறார். உங்கள் வாழ்க்கையில் எந்தக் காரியத்திற்காவது மற்றவர்களைச் சார்ந்து தோல்வியைத் தழுவியிருக்கிறீர்களா? நண்பர்களையோ, உறவினரையோ சார்ந்து ஏமாற்றம் அடைந்திருக்கிறீர்களா? மனிதரை நம்புவதை விட்டு விடுங்கள். அது நீங்கள் தேவனை சார்ந்து வாழ வழியை உருவாக்கும்.

### தேவனையே சார்ந்து வாழும் வாழ்க்கை

சுயத்தை சாராமல், பிறரைச் சாராமல் தேவனையே சார்ந்து வாழுக் கற்றுக் கொள்ளுங்கள். தாவீதுக்கு யுத்தம் செய்து பழக்கமில்லை. யுத்த வீரனுக்குரிய உடையை அணிந்து செல்ல அப்பியாசம் இல்லை (1சாமு 17:39) ஆனாலும் பெலிஸ்தியனாகிய கோலியாத் இஸ்ரவேலருடைய சேனைகளை நிந்திய (1சாமு17:10) செயலை சகித்துக் கொள்ள தாவீதால் முடியவில்லை. கோலியாத் ஒரு வீரன். ஆறுமுழம் ஒரு ஜாணும் உயரமுள்ளவன், வெண்கல தலைச்சீரா, கால்களிலே ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கல் இரும்பு (1சாமு17:4-7) இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தியனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி, பயப்பட்டார்கள். (1சாமு17:11) ஏனெனில் அவர்கள் தங்கள் சுயபெலனையும், இஸ்ரவேலரின் படை பெலனையும் மாத்திரமே நம்பியிருந்தாக்ள். தங்களால் கோலியத்தை ஜெயிக்க முடியாது என்பது அவர்களுடைய முடிவாயிருந்தது. யுத்தபழக்கமே இல்லாத தாவீது ஆனால் தேவ பழக்கம் நிறைந்த தாவீது கூறுகிறான். கோலியாத்தே நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ, நீ நித்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையத் தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார், உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்.(1சாமு17:45,46) என்றான். தன் திறமை, தன் அனுபவம், தன் மாம்ச பெலன் இவைகளைச் சாராமல் தேவனையே, தேவபெலனையே சார்ந்து நிற்கிற தாவீது ஒரு பெரிய வெற்றியைச் சுதந்தரித்துக் கொடுக்கிறார். இஸ்ரவேலர் அனைவரும் அதன் மகிழ்ச்சியையும் பலனையும் அனுபவிக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் எதிர் கொள்ளுகிற பிரச்சனைகளையும், போராட்டங்களையும், சவால்களையும் சந்திக்க உங்கள் சுயத்தையோ, பிறருடைய பலத்தையோ சாராமல் தேவனையே சார்ந்து வெற்றியுள்ள வாழ்க்கை வாழ பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனைச் சார்ந்து செயல்படும் பொழுது உலகம், மாமிசம், பிசாசு யாவற்றையும் ஜெயித்து மேற்கொள்வீர்கள். தேவனுக்காய் எழுந்து நிற்பீர்கள்.



எனது தீர்மானம் : என்னுடைய உலக சமூக பெலத்தை நான் சார்ந்து கொள்ளாமல், தேவனையே, தேவனின் பெலத்தையே சார்ந்து கொண்டு எந்த சூழ்நிலையிலும் தாவீதைப் போல தேவனுக்காய் நிற்கத் தீர்மானிக்கிறேன்

## செய்திகள்: டிஜிட்டல் மூளை அட்லஸ்

சம கால அறிவியலால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாத சிக்கலான விஷயம் மனித மூளை, பெர்க்லே சோதனைக் கூடத்தில் நடந்த ஆராய்ச்சியில், மூளையின் முன் பகுதி எப்படி வேலை செய்கிறது. ஆட்டிசம், எபிலெப்சி, சிசோபிரீனியா (கற்றலில் குறைபாடு) போன்ற மூளை நரம்பியல் தொடர்பான கோளாறுகள் ஏற்பட, மூளையின் எந்தப் பகுதி காரணம் போன்றவற்றைக் கண்டறிந்து உள்ளார்கள். மிகப் பெரிய திருப்புமுனையாக கருதப்படும் இந்த ஆராய்ச்சி முடிவைத் தொடர்ந்து, மரபியல் மூலக்கூறினால் ஆன மூளையின் முன் பகுதி போலவே டிஜிட்டல் அட்லஸ் உதவியுடன் எப்படி ஒரு தனி மரபணுவிலிருந்து மூளை உருவாகிறது. மரபியல் மாற்றங்களால் எப்படி நரம்பியல் கோளாறுகள் வருகின்றன என்பதை தொடர்ந்து ஆராய முடியும்" என்கிறார். அக்ஸ்சல் விசல் என்ற மருத்துவ ஆராய்ச்சியாளர்.

***1. மலேரியாவுக்கு மருந்து :*** மலேரியா நோயை விரைந்து குணப்படுத்தக் கூடிய புதிய மாத்திரையை கான்பூரில் உள்ள ஐ.ஐ.டி., ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளார்கள்.தற்போது நடைமுறையில் இருக்கும் மருந்துகளைவிட நேனோ சக்தியை உடலுக்குத் தருவதோடு, ரத்த சிவப்பணுக்களில் மலேரியா ஒட்டுண்ணி ஏற்படுத்தும் பாதிப்பை விரைவாக குறைக்கும் வலிமையுடையது" என்கிறார். இந்த ஆராய்ச்சியை முன்னின்று நடத்தும் வேதியியல் துறையைச் சேர்ந்த சந்தீப் வர்மா, பொதுவாக நடைமுறையில் உள்ள மலேரியா மருந்து விநியோகிக்கப்படும்போது, 10மி.கிராமில் 2 மி.கிராம் மட்டுமே பயன்பாட்டிற்கு வருகிறது. மற்றவை பலவிதங்களில் வீணாகி விடுவதால் வலிமையுடன் நோயைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இதைத் தடுக்கும் விதமாக மிக நுண்ணிய அளவில் உள்ள இந்தப் புதிய மருந்து, கேப்ஸ்சியூல்லில் அடைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வர உள்ளது.

***2. மாதம் ஒரு இன்சுலின் :*** சர்க்கரை நோய்க்கு தரப்படும் இன்சுலின் செல் மூலக்கூறில் எப்படி செயல்படுகிறது. என்ற ஆஸ்திரேலிய மருத்துவ தடுக்கும் விதமாக மிக நுண்ணிய அளவில் உள்ள இந்தப் புதிய மருந்து, கேப்ஸ்சியூல்லில் அடைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வர உள்ளது. மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு, சர்க்கரை நோய் சிகிச்சையில் புதிய நம்பிக்கையை தந்துள்ள நிலையில், டைப் 2 சர்க்கரை நோயாளிகள் தினமும் இன்சுலின் ஊசி போட்டுக்கொள்ளத் தேவை இல்லை. மாதம் ஒரு முறை போட்டுக்கொண்டால் போதும்" என்கிறார்கள்." கனடாவில் உள்ள மவுண்ட் சினாய் மருத்துவ மையத்தின் ஆராய்ச்சியாளர்கள். "கணையத்தில் உள்ள இன்சுலின் சுரக்கும் செயலிழந்த பீட்டா செல்கள் ஒரு முறை ஊசி மூலம் இன்சுலின் செலுத்தி தூண்டப்படும். இதைத் தொடர்ந்து 2,3 வாரங்களுக்குள் தானாகவே இன்சுலினை சுரக்கச் செய்யும் என்கிறார்கள். மருத்துவ ஆராய்ச்சியாளர்கள். ரவி ரத்தனாகர் மற்றும் கரோலின் க்ரானர். ஆரம்ப நிலையிலேயே டைப் 2 சர்க்கரை நோய்க்கு சிகிச்சை செய்யும்போது, முடிந்த அளவு பீட்டா செல்களை அழியாமல் காப்பாற்ற முடியும் என்பதும் அவர்கள் தரும் நம்பிக்கை.

# இயேசுவுடன் வாழ்க்கை இணைக்கப்பட்டால்

Dr. பொ. செல்வராஜ், கோவை

"நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். (கொலே3:1-4) கிறிஸ்துவுடன் (with Christ) என்று இரண்டு இடங்களிலும், அதே பொருள் அவரோடு என்று ஒரு இடத்திலும் வருவதைக் கூர்ந்து கவனியுங்கள். இந்த விவிலியப் பகுதியை சற்று ஆழமாக தியானிப்போம். கிறிஸ்துவுடன் வாழ்வதென்பது நம்முடைய கடந்தகாலம், நிகழ்காலம், மற்றும் வருங்காலத்திற்குப் பொருந்துவதாக இருக்கிறது. இயேசு ஜீவிக்கிறார். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் கிறிஸ்துவோடு எழுப்பப்படுதல் என்பது நிறைவுசெய்யப்பட்ட நிகழ்வாகும். மேலானவைகளைத் தேடுதல் என்பதை இயேசுவின் மீது நம்முடைய முழுகவனத்தையும் செலுத்துதல் என்றும் கூறலாம். பரலோகத்தின் மேல் நம்முடைய மனம் பதிக்கப்படும்போது நம்முடைய வாழ்க்கையானது சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கையெனும் நிலைக்கு உயருகிறது. இந்தப் பின்னணியில் கீழ்காணும் கேள்விகளுக்கு பதில்கூறுவீர்களா? கிறிஸ்துவோடு எழுதல் என்றால் என்ன? நாம் ஏன் மேலானவைகளைத் தேடவேண்டும்? கிறிஸ்வுடன் வாழ்வது என்பதை வேறுவகையில் எவ்வாறு கூறுவீர்கள்? மேற்கண்ட விவிலியப் பகுதி நான் விசுவாசிப்பதற்கு எதை எனக்குக் கற்றுத்தருகிறது? நான் செயல்படுவதற்கு எதை எனக்குக் கற்றுத் தருகிறது?

வில்லியம் டி. டென்னிஸன் இவ்வாறு கூறுகிறார் : கிறிஸ்துவின் ஆவியின் வழியாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வெற்றியோடு நமக்கு முழுமையான இணைப்பு கிடைக்கிறது; நமக்கு அன்பான இரட்சகரோடு இப்போதும் நமக்குப் பரலோக இணைப்பு இருக்கிறது; இவ்வுலக வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தாலும் நாம் அவரோடு இணைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.

ஐசக் வாட்ஸின் பாடலொன்று இவ்வாறு பொருள்படுகிறது : மகிழ்வுறு ஆன்மா அங்கே வாழ்கிறது. மனிதனோ அல்லலுற்று இங்கே உழல்கிறான். அவனது நம்பிக்கைகள் வானிற்குமேல் பதிக்கப்பட்டுள்ளன. அவனது விசுவாசமோ அவனிடமிருந்து அச்சத்தை அகற்றுகிறது. "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ2:12) கிறிஸ்துவுடன் வாழுங்கள். அவரே நம்முடைய ஜீவன். அவரோடு மகிமையில் வெளிப்படும் நாள் விரைந்து வந்துகொண்டிருக்கிறது. அல்லேலுயா!



## துதியுங்கள்:

பணித்தளங்களில் மிஷனெரி ஆலயங்கள் கட்ட அனுமதி கிடைத்தமைக்கு தேவனைத் துதியுங்கள்.

1. தூத்துக்குடி மாவட்டம் பேட்மாநகரம் கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.
2. விருதுநகர் மாவட்டம் நள்ளி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.
3. விருதுநகர் மாவட்டம் கன்னித்தேவன்பட்டி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைத்தமைக்காக தேவனைத் துதியுங்கள்.
4. திருப்பூர் மாவட்டம் தொட்டிபாளையம் கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.
5. திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் பணித்தளத்தில் சின்னகாளான்பட்டி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைத்தமைக்காக
6. 10th, 12th பிள்ளைகளுக்கு தேவன் தந்த நல்ல Resultக்காக தேவனைத் துதிப்போம்
7. தூத்துக்குடி (ஏப்12,13) 2. சிவகாசி(ஏப்19,20) 3. செம்பட்டி (ஏப்22,,23) VBS பயிற்சி பெற்ற ஒவ்வொரு தன்னார்வ ஊழியர்களையும் நமது மிஷனெரிகளையும் தேவன் வல்லமையாய் பயன்படுத்த தேவனைத் துதியுங்கள்.
8. கட்டப்பட்டு வரும் திருப்புளியங்குடி ஜெபவீட்டுக்காக துதிப்போம்
9. VBS பணியை ரூ.3,000 கொடுத்து தாங்க முன் வந்தவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.
10. தேவன் தந்த 2 புதிய மிஷனெரி சகோதரிகளுக்காக, 3 மிஷனெரி குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.
11. தேவன் தந்த புதிய TATA Venture நான்கு சக்கர வாகனத்திற்காக தேவனைத் துதிப்போம்.
12. தூத்துக்குடி Catholic Friends Preyer Fellowship மூலம் தேவன் 3 மிஷனெரிகளை தாங்கச் செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.
13. தூத்துக்குடி கால்டுவெல் காலனி C.S.I ஆலய தாய்மார் ஐக்கியத்தினர் 4 மிஷனெரிகளுக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் துரித இருசக்கர வாகனம் வாங்க ரூ. 40 ஆயிரம் கொடுத்ததற்காக தேவனைத் துதியுங்கள். சகோ. செல்வராஜ் அவர்கள் (கடலூர்) புதிய சைக்கிள் வாங்க ரூ. 4 ஆயிரம் கொடுத்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

## ஜெபிப்போம்:

14. தாளமுத்துநகர் பணித்தளம் நம்முடைய மிஷனெரி சகோதரி நல்மணி அவர்களுக்கு 18.4.13ல் இடது கை உடைந்துள்ளது. அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.
15. நம்முடைய மிஷனெரி சகோதரி. பரஞ்ஜோதி பாக்கியம் அவர்களது கணவர் சகோ. ஜனார்த்தனன் டேவிட் அவர்களுக்கு 29.4.13 அன்று நடந்த விபத்தில் கால்பகுதி, முகம் பாதிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவருக்கு பரிபூரண சுகம் கிடைக்க

ஜெபிப்போம்

16. சிவகாசி பணித்தளம் நமது மிஷனெரி சகோ. ஆர்தர் துரையின் மனைவியும் நமது மிஷனெரி சகோதரியுமான கிரீடா ஆர்தர் அவர்களுக்கு 1.5.13 அன்று விபத்தில் இடது கை பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. தேவன் சீக்கிரத்தில் நல்ல சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
17. நம்முடைய மிஷனெரி சகோதரி ஞான கிருபை அப்பா யோசேப்பு அவர்களுக்கு 5.5.13 அன்று ஏற்பட்ட விபத்தில் வலது கால் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. தேவன் சீக்கிரத்தில் நல்ல சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
18. மிஷனெரி பிள்ளைகள் கல்விக்காக, புதிய கல்வி ஆண்டில் மிஷனெரி பிள்ளைகளின் கல்வித்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
19. பணித்தளங்களில் ஏப்ரல் இறுதி வாரம் தொடங்கி ஜீன் 2ம்வாரம் முடிய நடைபெற்று வருகிற VBS பணிக்காக ஜெபிப்போம்.
20. தேர்வுகளில் தோல்வியடைந்த பிள்ளைகள் சோர்ந்து போகாது, தேற்றப்பட முன்னேற்ற முயற்சி பாதையில் தேவ ஒத்தாசையோடு செயல்பட ஜெபிப்போம்.
21. தேவனுடைய கூடாரத்தில் மாதந்தோறும் கடைசி புதன் கிழமை நடைபெறும் திறப்பின் வாயில் ஜெபத்திற்காக ஜெபிப்போம்.
22. நம்முடைய சகோ. பொற்செல்வன் ஆசீர் அவர்களுடைய ஊழியங்களுக்காக ஜெபிப்போம். திருச்சி மாவட்டம் கா்மேல் கிறிஸ்தவ மையம் என்ற இடத்தில் மே31,ஜீன்1,2தேதிகள் நடைபெறும் 19வது வருடாந்திர கன்வென்ஷனுக்காக ஜெபிப்போம்.
23. நமது ஊழிய தலைவர் சகோ.s. ஜெபராஜ் அவர்களுடைய ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
24. திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் பணித்தளத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைக்கவும், தடைகள் மாறவும் ஜெபிப்போம்.
25. தூத்துக்குடி மாவட்டம் அய்யனேரி கிராமத்தில் ஆலயம் கட்ட அனுமதி கிடைக்கவும், தடைகள் மாறவும் ஜெபிப்போம்.
26. குமரி மாவட்டம் தென்தாமரைகுளம் இம்மானுவேல் ஜெபக்குழு சகோ. டாக்டர் ஜாஜ் அவர்கள் பூரண சுகம் பெறவும் ஜெபிப்போம்.
27. குமரி மாவட்டம் பாகோடு திரு.தேவதாஸ் ஐயா அவர்கள் பூரண சுகம் பெறவும் ஜெபிப்போம்.
28. தேவன் புதிய 5 மிஷனெரி குடும்பங்களை நமது ஊழியத்திற்கு தர ஜெபியுங்கள்.
29. கடந்த நாட்களில் நமது மிஷனெரிகளை தாங்கி வந்த 7 பேர்களுடைய மிஷனெரி ஆதரவு காணிக்கை தவிர்க்க முடியாத காரணங்களால், அவர்களால் தாங்க முடியாமல் போயிற்று. இந்த மிஷனெரிகளை தாங்க புதிய குழுக்களை தேவன் எழுப்ப ஜெபியுங்கள்.
30. புதிய பணித்தளமான சோழவந்தன் பணித்தளத்திற்கு மிஷனெரி நியமிக்கப்பட
31. விருதுநகர் மாவட்டம் நள்ளி நமது மிஷனெரி சகோ. கிதியோன் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். அவரது பூரண சுகத்திற்காக மறுபடியும் பணித்தளம் சென்று பணிபுரிய ஜெபியுங்கள்.



**வெளிவந்துவிட்டது! வாங்கி பயனடையுங்கள்!**

**'வெற்றிப் பாதையில் நான்' மாணவர்களுக்கான சிறப்பு புத்தகம்**

விலை ரூ. 10/-

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

# திறப்பின் வாயில் ஜெபம்

**2013 ஜுன் 26 கடைசி புதன்**

**காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 ஜுன் 25 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.